**கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம்– 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் 09ம் தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

**பொருள் எண்.1**

கடையநல்லூர் நகராட்சி **15வது மத்திய நிதிக்குழு மான்ய திட்டம் 2021–22 Tied மான்ய நிதியின் கீழ்** இந்நகராட்சிப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் குடிநீர் விநியோக பணிகள் ரூ.180 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதில், **நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.31116/2021/அம்ருட், நாள்.06.12.2021ன்படி 15வது மத்திய நிதிக்குழு மான்ய நிதி திட்டம் 2021–22ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகள் 6 எண்ணமும் குடிநீர் திட்டப்பணிகள் 5 எண்ணமும் ஆகமொத்தம் 11 பணிகளுக்கு 120.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.** அதனடிப்படையில் கீழ்காணும் விபரப்படி உள்ள பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| **திடக்கழிவு மேலாண்மை பணிகள்** | | |
| 1. | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.27 பசுமை நுண்ணுயிர் உரக்குடில் மையம் எண்.2ல் வள மீட்பு மையம் கட்டும் பணி | 9.80 |
| 2. | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.3 கிருஷ்ணாபுரம் பூங்காவில் பொது சுகாதாரப் பிரிவுக்கு பிரிவு அலுவலகம் கட்டும் பணிக்கு | 10.00 |
| 3. | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.1 பசுமை நுண்ணுயிர் உரக்குடில் மையம் எண்.4ல் வள மீட்பு மையம் கட்டும் பணிக்கு | 9.80 |
| 4. | கடையநல்லூர் நகராட்சி போகநல்லூர் உரக்கிடங்கில் பாதுகாப்பு சுவர் கட்டும் பணிக்கு | 30.00 |
| 5. | கடையநல்லூர் நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 6 எண்ணம் பசுமை நுண்ணுயிர் உரக்குடில் மையத்தில் தயாரிக்கப்படும் உரங்களை பிரிக்கும் இயந்திரம் (Sieving Machine) 6 எண்ணம் வாங்கி நிறுவும் பணிக்கு | 6.00 |
| 6. | கடையநல்லூர் நகராட்சி புதிய பேருந்து நிலையம், அரசு மருத்துவமனை பேருந்து நிறுத்தம் மற்றும் கிருஷ்ணாபுரம் ரயில்வே பீடர் ரோடு ஆகிய பகுதிகளில் சிறுநீர் பிரை (Urinals) அமைக்கும் பணிக்கு | 6.00 |
| **குடிநீர் திட்டப் பணிகள்** | | |
| 7. | கடையநல்லூர் நகராட்சி பெரியாற்று படுகையில் அமைக்கப்பட்டுள்ள புதிய திறந்த வெளி கிணற்றிலிருந்து நகராட்சி குடிநீர் தலைமை பணியிட தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிக்கு புதிதாக குடிநீர் குழாய் அமைக்கும் பணிக்கு | 9.80 |
| 8. | கடையநல்லூர் நகராட்சிப் பகுதியில் குடிநீர் விநியோக குழாய் பதிக்கப்படாத விடுபட்ட இடங்களில் புதிதாக பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு | 9.80 |
| 9. | கடையநல்லூர் நகராட்சி கல்லாற்றுப் படுகையிலுள்ள குடிநீர் நீரேற்று நிலையத்திற்கு புதிதாக 62.50 KVA ஜெனரேட்டர் வாங்கி நிறுவும் பணிக்கு | 10.00 |
| 10. | கடையநல்லூர் நகராட்சி மலம்பாட்டை ரோடு உயர் மட்ட நீர் தேக்க தொட்டியிலிருந்து ரகுமானியாபுரம் மேற்கு பகுதிக்கு குடிநீர் தனி விநியோக குழாய் அமைக்கும் பணிக்கு | 9.50 |
| 11. | கடையநல்லூர் நகராட்சி பெரிய நாயகம் கோவில் குடிநீர் நீரேற்று நிலையத்தினை சுற்றி பாதுகாப்பு சுவர் அமைக்கும் பணிக்கு | 9.80 |
| | **மொத்தம்** | **120.50** |

<u>அலுவலக குறிப்பு–</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 5427/2021/இ1)**

**தீர்மான எண். 640**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.2

கடையநல்லூர் நகராட்சி **கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT)–** கடையநல்லூர் நகராட்சி – கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் **(KNMT)-2021–22**ன் கீழ் வார்டு எண்.27 மேலக்கடையநல்லூர் மயான வளாகத்தில் நவீன எரிவாயு தகனமேடை **(LPG Crematorium)** அமைக்கும் பணியினை ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மேற்கொள்ள **அரசாணை (MS) எண். 92 நாள்.30.10.2021ன் படி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையிலும் சென்னை தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை கடிதம் எண்.28620/2021/DO2 நாள். 20.11.2021ன்படி** தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு 30.11.2021ம் தேதி அன்று மாநில அளவிலான குறுகிய கால மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றது. மேலும் **ஆன்லைனில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்படவில்லை.**

| | |
|---|---|
| 1. | திரு.M. மாடசாமி,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். |
| 2. | திரு.S.சேக்உதுமான் கக்கீம்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் (Technical Bid) தொழில்நுட்ப தகுதி கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப தகுதி (Technical Responsive) பெற்றுள்ளதால், அரசு திட்டபணியாக இருப்பதால் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி 03.12.2021 அன்று விலைப்புள்ளி (Price Bid) உறை திறக்கப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்த விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு | முதல் விலை குறைப்பு செய்த பின் ஒப்பந்த விகிதம் | இரண்டாவது விலை குறைப்பு செய்த பின் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | கடையநல்லூர் நகராட்சி **கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT)–** கடையநல்லூர் நகராட்சி – கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் **(KNMT)-2021–22**ன் கீழ் வார்டு எண்.27 மேலக்கடையநல்லூர் மயான வளாகத்தில் நவீன எரிவாயு தகனமேடை **(LPG Crematorium)** அமைக்கும் பணிக்கு. | 150.00 | திரு.M.மாடசாமி, ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 4.80% கூடுதல் | 4.70% கூடுதல் | 4.60% கூடுதல் |
| | | | திரு.S.சேக்உதுமான் கக்கீம், ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 5.20% கூடுதல் | 5.20% கூடுதல் | 5.20% கூடுதல் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட கூடுதலாக விலை விகிதம் கொடுத்துள்ளதால் விலை குறைப்பு சம்மதக்கடிதம் கோரப்பட்டதில் திரு.M.மாடசாமி, அரசு ஒப்பந்தக்காரர், கடையநல்லூர் என்பவர் மதிப்பீட்டை விட கூடுதலாக 4.60%க்கு பணியினை செய்வதற்கு சம்மதம் கடிதம் சமர்பித்துள்ளார். ஆகவே மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட 4.60% கூடுதலாக கொடுத்துள்ள திரு.M.மாடசாமி, அரசு ஒப்பந்தக்காரர், கடையநல்லூர், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்ய மன்ற அனுமதிக்கு சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 4458/2021/இ1)**

**தீர்மான எண். 641**

அரசு திட்டப்பணியாக இருப்பதை கருத்திற் கொண்டு அனுமதிக்கப்பட்டது.

**(ஒம்)S.ரவிச்சந்திரன்,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**